4. கவன ஈர்ப்பு

திருத்தணி நகரத்திற்கு புறவழிச் சாலை அமைத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. திரு. பி.எம். நரசிம்மன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.எம். நரசிம்மன் அவர்கள்.*

திரு. பி.எம். நரசிம்மன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகின்றேன். "திருத்தணி நகரத்திற்கு புறவழிச் சாலை அமைக்க வேண்டியதன் அவசியம்" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.*

(முற்பகல் 11-35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது சம்பந்தமாக விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

அறிக்கை

2012-2013 ஆம் ஆண்டிற்கான நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறையின் மானியக் கோரிக்கையின்போது திருத்தணி நகரத்துக்கு நடப்பாண்டில் புறவழிச் சாலைக்கான நில எடுப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்று அறிவிக்கப்பட்டதன் தொடர்ச்சியாக, அரசாணை (நிலை) எண் 210, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை,

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [2016 ஆகஸ்ட் 24

நாள் 17-12-2012-ல் திருத்தணி நகரத்திற்கு தேசிய நெடுஞ்சாலை எண் 205-ல், கி.மீ. 10/4-ல் ஆரம்பித்து, சட்ராஸ்-செங்கல்பட்டு-காஞ்சிபுரம்-அரக்கோணம்-திருத்தணி சாலையின் கி.மீ. 104/2-ல் முடியும் வரையில் புறவழிச் சாலை அமைக்கும் பணிக்கு நிலத்தினைக் கையகப்படுத்திட ரூ.11.61 கோடிக்கு நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து வருவாய்த் துறையினர்மூலம் தனியார் மற்றும் அரசு நிலங்கள் மொத்தம் 9.11.0 ஹெக்டேர் கையகப்படுத்தப்பட்டு, வருவாய்த் துறையின்மூலம் நில உரிமையாளர்களுக்கான பணம் பட்டுவாடா செய்யும் பணி தற்போது நிறைவடைந்துள்ளது. 2014-2015 ஆம் ஆண்டிற்கான நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறைக்கான மானியக் கோரிக்கையின்போது, "திருத்தணி நகருக்கு ரூ.36 கோடி மதிப்பில் 3.2 கி.மீ. நீளத்தில் நந்தியாற்றின் குறுக்கே ஒரு பாலம் மற்றும் ஒரு இரயில்வே மேம்பாலத்தையும் உள்ளடங்கிய புறவழிச் சாலை அமைக்கப்படும்" என்ற அறிவிப்பினைத் தொடர்ந்து, அரசாணை (நிலை) எண் 45, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை, நாள் 16-4-2015-ல் நந்தியாற்றின் குறுக்கே மேம்பாலப் பணி உட்பட புறவழிச் சாலை அமைப்பதற்கு ரூ.15.00 கோடியும், இரயில்வே பாதையின் குறுக்கே இரயில்வே மேம்பாலம் அமைக்க ரூ.21.00 கோடியும், ஆக மொத்தம் ரூ.36.00 கோடியில், 3.241 கி.மீ. நீளத்திற்கு திருத்தணி புறவழிச் சாலை அமைக்க அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. புறவழிச் சாலைக்கான மதிப்பீடு மற்றும் நந்தியாற்றின் குறுக்கே கட்டப்படவுள்ள பாலத்திற்கான வடிவமைப்பு இறுதி நிலையை எட்டியுள்ளது. மேலும், இரயில்வே மேம்பாலத்திற்கான பொது நேர்ப்பாடு வடிவமைப்பு (GAD) அங்கீகாரத்திற்காக இரயில்வே நிருவாகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. மேற்படி பணிகள் இறுதி செய்யப்பட்டவுடன், புறவழிச் சாலைப் பணிக்கான ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு உடனடியாக பணி துவங்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.எம். நரசிம்மன் அவர்கள்.

திரு. பி.எம். நரசிம்மன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் இலட்சியம் உயர்வானது. மாண்புமிகு அம்மா அவர்களின் பார்வை தெளிவானது. மாண்புமிகு அம்மா அவர்களின் வெற்றியானது, எதிலும் வெற்றி, எப்பொழுதும் வெற்றி.

2016 ஆகஸ்ட் 24] [திரு. பி.எம். நரசிம்மன்]

(மேசையைத் தட்டும் ஒலி) எனவேதான், பாதுகாப்பு, அமைதி, வளர்ச்சி ஆகியவற்றை அனைத்து மக்களும் பெறுகின்ற மாநிலமாக தமிழ்நாட்டைக் காண்பதே எனது கனவாகும் என்றார் மாண்புமிகு இதய தெய்வம் தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். எனவேதான், மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள், இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில், ஒருங்கிணைந்த சாலைக் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 2,800 கோடி ரூபாய் தாராளமாக ஒதுக்கீடு செய்துள்ளார்கள். இதனை அனைத்து தரப்பு மக்களும் பாராட்டுகிறார்கள், போற்றுகிறார்கள்.

என்னுடைய திருத்தணி தொகுதியில், திருத்தணி நகரிலிருந்து, ஆந்திரா, கர்நாடகம், அரக்கோணம், காஞ்சிபுரம் மற்றும் சென்னை ஆகிய பகுதிகளுக்கு நாள்தோறும் சுமார் 75 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வாகனங்கள் செல்கின்றன. மேலும், திருவிழாக் காலங்களில் இலட்சக்கணக்கான வாகனங்கள் வந்து செல்கின்றன. கடும் போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்காக திருத்தணி நகருக்கு புறவழிச் சாலை அமைக்க மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களது அரசு ரூபாய் 36 கோடி ஒதுக்கீடு செய்து ஆணை வழங்கியுள்ளதற்கு, தொகுதி மக்கள் சார்பில் கோடானு கோடி நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இது அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும். எனவே, மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் இவ்வாண்டு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, பணி தொடங்கி முடிக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆணைக்கிணங்க, 2012-2013 ஆம் ஆண்டு திருத்தணி நகரத்திற்கு புறவழிச் சாலை அறிவிக்கப்பட்டு, முதற்கட்டப் பணியான நிலம் எடுக்கின்ற பணி முடிக்கப்பட்டுள்ளது. 4 கிராமங்களைச் சேர்ந்த தனியார் நிலம் திருத்தணியில் 5.56 ஹெக்டேர் நிலம், பட்டாபிராமபுரத்தில் 1.67 ஹெக்டேர் நிலம், வள்ளியம்மாபுரம் மற்றும் தேவசேனாபுரத்தில் 1.10 ஹெக்டேர் நிலம் மற்றும் அரசு நிலம் 0.78 ஹெக்டேர் நிலம், ஆக மொத்தம் 9.11.0 ஹெக்டேர் நிலம் கையகப்படுத்தப்பட்டு,

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [2016 ஆகஸ்ட் 24
வருவாய்த் துறையின் மூலம் நில உரிமையாளருக்கு பணம் பட்டுவாடா செய்யும் பணி தற்போது நிறைவடைந்துள்ளது. புறவழிச் சாலையின் இடையே நந்தியாற்றின் குறுக்கே மேம்பாலம் மற்றும் இரயில்வே பாதையின் குறுக்கே, இரயில்வே மேம்பாலம் அமைக்க பூர்வாங்கப் பணிக்கான நேர்ப்பாடு, வடிவமைப்பு மற்றும் கட்டுமானத்திற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. திருத்தணி புறவழிச் சாலை 3.20 கி.மீ. நீளம் அமையவுள்ளது. அந்தப் பணிகள் எல்லாம் விரைந்து தொடங்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.எம். நரசிம்மன் அவர்கள்.*

திரு. பி.எம். நரசிம்மன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவை விதி 110-ன்கீழ், பல அதிசயங்கள் தமிழ்நாட்டிலே நடைபெறுகின்றன. இதனை மக்கள் போற்றுகிறார்கள், பாராட்டுகிறார்கள். சுய சிந்தனை, தலைமைப் பண்பு, எடுத்துக்கொள்ளும் காரியத்தினை முடிக்கும் ஆற்றல், விடாமுயற்சி கொண்டு வெற்றி காணும் போர்க்குணம், ஈடற்ற ஈகைதனைக் கொண்ட புரட்சித் தலைவி அம்மா (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களின் நல்லாட்சியில் நான் சார்ந்திருக்கிற திருத்தணி தொகுதியில், பொதட்டூர்பேட்டை பேரூராட்சியில் தினந்தோறும் ஏற்படும் போக்குவரத்து நெரிசலைக் குறைக்க புறவழிச் சாலை வேண்டும் என பல ஆண்டுகளாக பொதுமக்கள் அரசிடம் கோரிக்கை வைத்துள்ளனர். இது அவசியம் மற்றும் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும். இத்திட்டம், மாண்புமிகு அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில் ஆய்வில் எடுத்து, நிறைவேற்றி வைக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.*

முற்பகல் 11-40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், திருத்தணி*

2016 ஆகஸ்ட் 24] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]
நகரத்திற்கு புறவழிச் சாலை அமைப்பது பற்றி இங்கே கவனத்தை ஈர்த்திருக்கின்றார்கள். அவருடைய தொகுதிக்குட்பட்ட பகுதியில் போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருப்பதாக இங்கே குறிப்பிட்டிருக்கின்றார்கள். ஆகவே, அங்கே ஆய்வு செய்யப்பட்டு, அந்த ஆய்வின் அடிப்படையிலே, போக்குவரத்து செறிவு அதிகமாக இருக்கின்றபட்சத்தில், வருகின்ற காலத்தில் நிதிநிலைக்கேற்ப, அரசு பரிசீலிக்கும் என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

5. மானியக் கோரிக்கைகள், 2016–2017, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

(அ) கோரிக்கை எண் 29—சுற்றுலா–கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை)

(ஆ) கோரிக்கை எண் 18—கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை)

(அ) கோரிக்கை எண் 29—சுற்றுலா–கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2016-2017 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளின் மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 29-சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை). மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறநெறி முதற்றே அரசின் கொற்றமென, திறம் நிரம்ப ஒளிதரும் நிலவென, மழைதரும் முகிலென, அருள்தரும் இறையென, மக்களுக்கு வரம் தரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா அவர்கள், நல் ஆவின் பால் முழுவதும் கன்றுக்கில்லை; நறும்பூவின் மணம் முழுவதும் சோலைக்கில்லை; நெல் ஆகும்*